குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# யோசுவா பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

மோசே மரித்துப்
போனான். இஸ்ரவேலரை
வழிநடத்திச்செல்ல தேவன்
தன்னை தெரிந்தெடுத்திருக்கிறார்
என்று யோசுவாவுக்கு தெரியும்.
யோசுவா படையை ஆயத்தம்
செய்வதற்கு முன்னால், தன்னை
ஆயத்தப்படுத்த
வேண்டியதாயிற்று.



ஜனங்கள் தேவனுடைய வார்த்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்தால் யோசுவாவுக்கு வெற்றியும், செழிப்பையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் கொடுப்பேன் என்று தேவன் வாக்கு பண்ணினார்.





யோசுவாவை
பின்பற்றவும்
தேவனுடைய
வார்த்தைக்கு
எப்போதும்
கீழ்ப்படியவும்
இஸ்ரவேல்
புத்திரர் வாக்கு
பண்ணினார்கள்.



புதிய தலைவன்
ஞானமுடன்
கானானுக்குள்ளே
வேவுகாரர்களை
அனுப்பி, பெரிய எ
ரிகோ பட்டணத்தின்
பாதுகாப்பு
முறைகளை படித்து
வரச்செய்தான்.
இஸ்ரவேலின் முதல்
யுத்தம் அங்கே
நடைபெறும்.



பட்டணத்திற்குள்ளே வேவுகாரர்கள் வந்திருக்கிறார்கள் என்று யாரோ எரிகோவின் ராஜாவிடத்தில் தெரிவித்தார்கள். அவன் படைவீரர்களை அனுப்பி கண்டுபிடிக்கச்சொன்னான். தேடுதலானது அவர்கள் தங்கியிருந்த, ராகாப் வீட்டில் தொடங்கியது. படைவீரர்கள் அவளுடைய வீட்டின் கதவை முரட்டுத்தனமாக தட்டினார்கள். வேகமாக, ராகாப் அந்த மனிதர்களை சணல் தட்டைகளை பரப்பி மறைத்து வைத்தாள்.

போர்ச்சேவகர்கள்
சென்றபின், ராகாப்
ஒரு கயிறு மூலமாக
அந்த மனிதர்களை
பட்டணத்தின் வெளி
மதிலிலே பாதுகாப்பாக
இறக்கிவிட்டாள்.
வேவுகாரர்களுக்கு
அவள் ஏன்
உதவிசெய்தாள்?



ஏனெனில் தேவன்
அவர்களுடன்
இருக்கிறார் என்று
அவளுக்கு தெரிய
வந்தது. தேவன்
தன்னுடைய
வாழ்க்கையை பாதுகாக்க
வேண்டும் என்று
நினைத்தாள்.
அவளையும், அவள்
குடும்பத்தையும்
காப்பாற்ற வேவுகாரர்கள்
வாக்கு பண்ணினார்கள்.



எரிகோவுக்கு போகுமுன்னால், இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்தில் பிரவேசிக்க யோர்தான் நதியைக் கடக்க வேண்டியதாயிற்று. ஆனால் பாலங்கள் ஒன்றுமில்லை. ஜனங்கள் எப்படி கடப்பார்கள்?



ஆசாரியர்கள், பத்துக் கற்பனைகளைக் கொண்ட உடன்படிக்கை பெட்டியை தூக்கிக் கொண்டு, ஜனங்களையும் போர்சேவகர்களையும் நடத்த வேண்டும் என்று தேவன் யோசுவாவுக்கு சொன்னார். ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரைத் தொட்டவுடன், தேவன் அற்புதம் செய்தார். தேவன் உலர்ந்த பாதையை தண்ணீர் மத்தியில் உருவாக்கினார்.



ஜனங்கள் பாதுகாப்பாக கடந்தபின்னர், பன்னிரெண்டு கற்களை ஆற்றின் நடுவிலும், பன்னிரெண்டு கற்களை ஆற்றின் கரையிலும் நட்டினார்கள். தேவனுடைய பெரிய வல்லமையையும், அன்பையும் இஸ்ரவேலர் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்க இது ஒரு அடையாளமாகயிருந்தது.





எரிகோவில் பலமான, பருமனான
கோட்டை இருந்தது.
யோசுவா யுத்தத்திற்காக
ஆயத்தம் பண்ணும் போது,
தேவன் அவருடைய
சேனையின் தலைவனை
பரலோகத்திலிருந்து
அனுப்பி இஸ்ரவேலின்
புதிய தலைவனிடம்
அவர் உங்களுக்காக
யுத்தத்தில் ஜெயத்தை
கொடுப்பார் என்று
ஞாபகப்படுத்தினார்.



தேவன் யோசுவாவையும் எரிகோ பட்டணத்தை எப்படி தாக்க வேண்டும் என்று சொன்னார். அது ஒரு புதிரான திட்டமாயிருந்தது. தேவனுடைய மக்கள் ஆறு நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையும், ஏழாம் நாளில் ஏழு முறையும் சுற்றி வர வேண்டும். பின்பு அவர்கள் எக்காளத்தை ஊதி சத்தமிட மதிற்சுவரானாது இடிந்து விழுந்து தரைமட்டமாகும்.

தேவன் சொன்னவிதமாக யோசுவாவும், அவனுடைய படையும் செய்தார்கள். ஒருவேளை எரிகோவின் ஜனங்கள் அவர்களைப் பார்த்து சிரித்திருக்கலாம். ஆனால், ஏழாம் நாள் ஏழுமுறை சுற்றி வந்தபின் ஆசாரியர்கள் எக்காளத்தை ஊதினார்கள்.





அப்போது தேவன் வாக்களித்த விதமாக ... எரிகோவின் பெரிய மதில் தரைமட்டமானது.





மதிலிலே ராகாப் வீடுமாத்திரம்
பாதுகாப்பாயிருந்தது.
அவள் கயிற்றை கட்டி
ஜன்னலிலிருந்து தொங்க
விட்டிருந்தாள்.



துரிதமாக, யோசுவாவின்
மனிதர்கள் ராகாபையும்
அவளுடைய குடும்பத்தையும்
காப்பாற்றினார்கள். பின்பு தேவன்
கட்டளையிட்ட பிரகாரம்,
எரிகோ அழிக்கப்பட்டது.



எரிகோவின் தங்கம்,
வெள்ளி மற்றும் பொக்கிஷங்களை
யோசுவா பரிசுத்தத்துடன் தேவனுடைய
வேலைக்காக அற்பணித்தான். பின்பு
எரிகோ பட்டணத்தை திரும்ப கட்டுபவர்கள்
மேல் சாபத்தை வைத்தான்.


கானானிலே உள்ளவர்கள்
யோசுவா எப்படி எரிகோவை
தோல்வியடையச்செய்தான் என்று
விரைவிலே கேள்விப்பட்டார்கள். தேவன்
தன்னுடைய ஜனங்களுடன் இருக்கிறார்
என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

யோசுவா பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யோசுவா 1 - 6

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16